1992 ஏப்ரல் 2] [பேரவைத் தலைவர்]

7. அறிவிப்பு

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு நிறைவு விழாவை யொட்டி அவர் பிறந்த நாளான 14—4—1992 ஆம் நாள் விடுமுறை தினமாக அறிவிக்கப் பெறுதலும், அன்றைய தினப் பேரவை அலுவல் பிறிதொரு நாள் எடுத்துக்கொள்ளப் பெறுதலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் எழுப்பி, கோரிக்கை விடுத்ததைப் போல, பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளதை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் நூற்றாண்டுவிழா நிறைவையொட்டி அவருடைய பிறந்த நாளான 14—4—1992 அன்று மாநில அரசு அலுவலகங்களுக்கும், மாநில அரசு சார்புடைய நிறுவனங்களுக்கும் விடுமுறை அளித்து இருப்பதாகப் பேரவைக்கு அறிவிக்கக் கோரியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்று பேரவைக் கூட்டம் இல்லை. அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கைகள் வேறு ஒரு நாளில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மானியக் கோரிக்கை எண் 17—கல்வி—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. செல்லக்குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்காக அதிக நிதி இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கும் இந்த அரசையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் முதற்கண் நான் மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும், குறிப்பாக, ''இளமையில் கல்'' என்ற அவ்வைப் பிராட்டியாரினுடைய வாய்மொழிக்கேற்ப இளமையிலே கல்வியைக் கற்றுக் கொடுக்கின்ற தொடக்கக் கல்விக்கு இந்த அரசு அதிக நிதி ஒதுக்கி இருப்பது என்பது பெருந்தலைவர் காமராஜர் வகுத்த வழியிலே, பாதையிலே இந்த அரசு நடைபோடுகிறது என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது. படிக்கப் படிக்க பெருகிக் கொண்டிருக்கின்ற அறிவாற்றல் என்பது, வறுமையின் காரணமாகவும், சமுதாயச் சூழ்நிலையின் காரண